# இயேசுவே வாரும்

தொடர்பு முகவரி:

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

சகோ. காலேப் யோசுவா
#11, திருமால் நகர்,
பூவிருந்தவல்லி,
சென்னை - 600 056.

"ஓரேப்"
திருவைகுண்டம் - 628 601.
தூத்துக்குடி மாவட்டம்.

## அன்பின் விருந்து அழைப்பிதழ்
## (Love Feast Invitation)

1. தேவனுடைய சித்தத்தினாலே, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காக சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான், கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது:
உங்களுக்கு இரக்கமும் சமாதானமும் அன்பும் பெருகக்கடவது.

2. பிரியமானவர்களே, முற்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தின் உடன்படிக்கைக்கு அந்நியரும், நம்பிக்கை இல்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்து; மாம்ச இச்சையின்படியே நடந்து, மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, கண்களின் இச்சைகளிலே நடந்து, ஜீவனத்தின் பெருமைகளிலே அகந்தையாய் வாழ்ந்து, சுபாவத்தினாலே கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்த நம்மில்; இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன் அன்புகூர்ந்து, அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த நம்மை, கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம். நம்மில் ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல, மாறாக இது தேவனுடைய ஈவு.

3. இப்படியிருக்க, கர்த்தர் தயவுள்ளவர் என்பதை நாம் ருசிபார்த்ததுண்டானால், நம் மத்தியில் காணப்படும் சகல துர்குணங்களையும் சகலவித கபடங்களையும், வஞ்சகங்களையும், இருமாப்புகளையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும், கோள்சொல்லுதலையும், விக்ரகாராதணையாகிய பொருளாசையையும், அகந்தயையும், மனம்போல் வாழ்வு வாழ்வதையும் ஒழித்துவிட்டு, நாம் வளரும்படி, புதிதாய் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருக்கக்கடவோம்.

4. அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்ட நாம் மாயமற்ற சகோதர சிநேகம் உள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்துக்கு கீழ்படிந்து அதாவது தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் கீழ்படிந்து, நம்முடைய ஆத்துமாக்களை சுத்தமாக்கிக்கொண்டு, சுத்த இருதயத்தோடே ஒருவருக்கொருவர் ஊக்கமாய் அன்புகூரக்கடவோம். நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்பதே நம்மை தம்முடைய கிருபையினால் இரட்சித்தவருடைய புதிதான கட்டளையாயிருக்கிறது. நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்து நமக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னித்து, பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்வோம்.

5. இந்நாட்களில் பொதுவாக நமது சபைகளில் எங்கும் முறுமுறுப்புகளும், உட்பூசல்களும், சகோதரசிநேகமின்மையும் காணப்படுகிறது. இதற்குக் காரணமென்ன? அ) விசுவாசிகள் மீது பாஸ்டர்களுடைய சர்வாதிகார ஆதிக்கம். ஆ) பாஸ்டர்களது தவறான உபதேசங்கள் இ) விசுவாசிகள் மத்தியில் சகோதர சிநேகமின்மை, அதாவது அன்பில்லாமை ஈ) பிசாசின் கிரியைகள்.

6. கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஐந்துவகை ஊழியங்களை ஏற்படுத்தி யுள்ளார் என்பதை மறந்து, புறக்கணித்து, தாங்கள் தான் சபைக்கு எல்லாவற்றிற்கும் எல்லாம் என்ற மனப்போக்கில் பாஸ்டர்கள் சபைமீது சர்வாதிகார ஆட்சி செய்கிறார்கள். இதனால் சபை பரிசுத்தஆவிக்கு பதிலாக போதகருடைய ஆவியைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. போதகர்கள் போன்று சபைகளும் நடந்துகொள்ளுகிறது. போதகருடைய மனைவி வெளியே வேலைக்குச் செல்லுகிறாள். பாருங்கள், அப்படியே விசுவாசிகளுடைய மனைவிகளும் வெளியே வேலைக்குச் செல்லுகிறார்கள். பரிசுத்தஆவி, தேவனுடைய வார்த்தையை எடுத்துக்கொண்டு சபையை வழிநடத்துவதற்குப் பதிலாக; மேய்ப்பனுடைய ஆவி, தேவனுடைய வார்த்தையை எடுத்துக்கொண்டு, தன் சுயபுத்தியின்மேல் சார்ந்து அதற்கு சுயவியாக்கியானம் கொடுத்து சபையை வழிநடத்துகிறது. தங்கள் சர்வாதிகாரத்தை நிலைநாட்டவே பாஸ்டர்கள் சபையில் இதர நான்கு வகை ஊழியங்களையும் உதாசீனப்படுத்துகிறார்கள், புறக்கணிக்கிறார்கள். சில சபைகளில் காலேப் யோசுவாவுடன் ஐக்கியம் வைத்திருப்பவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். அவரோடு ஐக்கியம் வைக்காதே என்று கூறி பகிரங்கமாக கடிந்துக் கொள்ளப்படுகிறார்கள். ஸ்தாபசபைகளைவிட கொடுமையான முறையில் இக்காலத்துக்குரிய சபைகளில் விசுவாசிகள் பாஸ்டர்களால் நடத்தப்படுகிறார்கள். சில சபைகளில் பாஸ்டர்கள் தங்களைக் கேட்காமல், ஒரு விசுவாசி தன் குடும்பக்காரியத்தில் கூட எந்தவிதமான முடிவும் எடுக்கக்கூடாது என்று கட்டளைப்பிறப்பிக்கிறார்கள். ஸ்திரீகள் தங்கள் புருஷனுக்கு கீழ்படிவதைவிட பாஸ்டர்களுக்குக் கீழ்படியக் கற்றுக்கொடுக்கப்படுகிறார்கள். அந்த அளவுக்கு பாஸ்டர்கள் ஆதிக்கம் விசுவாசிகள் மீது காணப்படுகிறது. அந்தோ பரிதாபம்!

7. பெண்கள் சுடிதார் அணியக்கூடாது, அணிந்து சபைக்கு வரக்கூடாது என்ற ஒரு தவறாக போதனையை சபையார் மீது திணிக்கிறார்கள். சுடிதார் ஆண்களது ஆடை ஆதலால் ஆண்களது ஆடைகளை பெண்கள் அணியக்கூடாது என உபதேசிக்கிறார்கள். அந்த பாஸ்டர் சுடிதார் ஆடை அணிகிறவராயிருப்பார் என நினைக்கிறேன். ஆதலால் தான் அவர் அப்படிப்பட்ட ஆணை பிறப்பிக்கிறார். பாஸ்டர்கள் சுடிதார் அணியும் சபையில் பெண்கள் சுடிதார் ஆடை அணியக்கூடாது என்பது சரிதான். ஆனால் பாஸ்டர்கள் சுடிதார் அணியாத சபைகளில் பெண்கள் சுடிதார் அணியலாம், அது ஆண்கள் ஆடை ஆகாது என நான் நிதானிக்கிறேன்.

8. ஒரு ஆண் ஒரு பெண்ணுக்கு தங்கள் விவாக உடன்படிக்கைக்கு, நல்மனசாட்சியின் உடன்படிக்கைக்கு அடையாளமான ஒரு வெளிப்புற சின்னத்தை தாலி/மோதிரம் அணியக்கூடாது என்பது கள்ள உபதேசம். இப்படிப்பட்ட உபதேசம் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில், இக்காலத்துக்குரிய செய்தியின் அடிப்படையில் சரியானதல்ல என்பதை பலமுறை எழுதியுள்ளேன். தேவன் நோவாவோடும், அவ்விடத்தில் இருந்த ஜீவஜந்துக்களோடும் செய்த உடன்படிக்கைக்கு அடையாளமாக வானவில்லை மேகத்தில் வைத்தார். ஆதி.3:13. நல்மனச்சாட்சியின் உடன்படிக்கைக்கு அடையாளம் ஞானஸ்நானம். 1பேது.3:21. சகோதரர்களிடத்தில் ஒருவரிலொருவருக்கு பங்குக்கு அடையாளம் ஒருவர் கால்களை ஒருவர் கழுவுதலாகும். யோ.13:8. அவ்வாறாகவே திருமண ஒப்பந்தத்திற்கு அடையாளம் தாலி/மோதிரம் ஆகும். இதை அசட்டை செய்கிறவன் தேவனை அசட்டை செய்கிறான். தேவன் நியமித்த ஒழுங்கை அசட்டை பண்ணுகிறான். இந்த அடையாளம் எதற்கு? ஒருவருக்கொருவர் செய்த உடன்படிக்கையை நினைவுகூர ஆகும். ஆதி.9:15,16.

9. 1963ல் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்து, தற்போது நாம் ஆயிரம் வருடம் அரசாட்சியில் இருக்கிறோம் என்பதும் ஒரு மாறுபாடான உபதேசம். இதனால் இவர்கள் ஞானஸ்நானம் கொடுப்பதில்லை, கர்த்தருடைய இராப்போஜனபந்தியில் பங்குபெறுவதில்லை, கால்களைக் கழுவும் ஆசரிப்பில் கலந்து கொள்வதில்லை. இவ்வாறாக ஒருவனுடைய ஆத்தும ரட்சிப்பை, வளர்ச்சியை இவர்கள் தடை செய்கிறார்கள். ஒருவனை நித்தியஜீவனுக்கு அபாத்திரனாக்கும் இந்த உபதேசம் சாத்தானுடைய வஞ்சகமாயிருக்கிறது.

10. ஆதி.1:1 முதல் வெளி.22:21 வரை ஏழாம் சபைத்தூதனாகிய சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் அறியாத இரகசியம் ஒன்றுமில்லை, அனைத்து சம்பவங்களைக் குறித்தும், தீர்க்கத்தரிசன வசனங்களைக் குறித்தும், சாட்சிகளைக் குறித்தும், இரகசியங்களைக் குறித்தும் அவர் அறிந்துள்ளார் என்பதும் ஒரு கள்ள உபதேசம். பாருங்கள், தேவன் தமது ஊழியக்காரருக்கு சகலத்தையும் காண்பிப்பதில்லை, வெளிப்படுத்துவதுமில்லை. அவர்கள் எதை தங்களது ஊழியத்துக்கு அறிந்துகொள்ள வேண்டுமோ அதை மாத்திரமே வெளிப்படுத்துகிறார். உதாரணமாக ஏழாம் சபைக்கால தூதன் ஏழு எக்காளங்கள், ஏழு கலசங்கள் குறித்து பிரசங்கிக்க விரும்பினாலும் அவர் அதைக் குறித்து பிரசங்கிப்பதற்கான வெளிப்பாட்டை தேவனிடமிருந்து பெறவில்லை. ஏனென்றால் அது அவருடைய ஊழியத்தில் சம்பந்தப்பட்டது இல்லை. அது மோசே, எலியாவுக்குரிய ஊழியம், இஸ்ரவேலருக்கடுத்த காரியம்.

11. இப்படியாக பாஸ்டர்கள் அநேக தவறான உபதேசங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து, இறக்குமதி தொழிலில் பொருள் சம்பாதித்து, சுகபோக வாழ்க்கை வாழ்வதற்கு விசுவாசிகளை பலிக்கடாவாக்குகிறார்கள். பாஸ்டர்களும், விசுவாசிகளும் வெளிநாட்டிலிருந்து வரும் உபதேசங்களினால் வசீகரிக்கப்படுகிறார்கள். பரிசுத்தஆவியின் ஒத்தாசையினால் ஒன்றை அறிந்துகொள்ள முயற்சிப்பதில்லை. சாத்தான் பாஸ்டர்கள் மூலமாக சபைக்குள் நுழைந்து சபையை பாழாக்குகிறான்.

12. விசுவாசிகள் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாக தாகம் தீர்க்கப்படாததினால் அவர்கள் மத்தியில் ஏகசிந்தை, ஏகஅன்பு, ஒரே இருதயம், ஒரே மனம் இல்லை. இதனால் சகோதர சிநேகம் சபையில் சிதைந்துக் காணப்படுகிறது.

13. சபையின் ஒவ்வொரு பக்கத்திலும் பிசாசுகள் கிரியை செய்துகொண்டிருக்கின்றன. அவை மிகவும் பக்தியுள்ளவைகளாக இருக்கின்றன. ஆதலால் அவர்கள் ஒவ்வொரு ஞாயிறும் சபைக்குச் சென்று பக்திவிருத்தியில் துதித்துப் பாடுகின்றனர். இருப்பதிலே மிக பக்தியுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இயேசு, நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள் என்று இவர்களைக் குறித்துக் கூறுகிறார். உண்மையாகவே தேவனைக் காண விரும்புகின்ற எந்த மக்களும், அதை அல்லது மற்றதை, மற்றும் தங்களால் ஜீவிக்க முடியாத காரியங்களை சபை தங்களுக்கு கட்டளையிடுவதை அனுமதிக்க மாட்டார்கள். நீங்கள் தேவனுடைய சுபாவத்தை உங்களில் கொண்டிருந்தால் நீங்கள் பரிசுத்தத்திற்கு செல்வீர்கள். சரியான காரியத்திற்குச் செல்வீர்கள். நீங்கள் சரியாக ஜீவிப்பீர்கள். கர்த்தருடைய காரியங்களை சாப்பிட்டுக்கொண்டு பிறகு அங்கே சென்று பிசாசுடன் வேரூன்றுகிறாயா? அப்படியானால் அத்துடன் ஏதோ தவறு இருக்கிறது. அந்த ஆவிகளுக்குச் செவிகொடுப்பதை விட்டு விலகுங்கள். நீங்கள் தனியாக நிற்க நேரிட்டாலும் பரவாயில்லை. (பிசாசியல், பக்கம் 171, பத்தி 143)

14. ஆதிக்காலங்களில் விசுவாசிகள் தாங்கள் ஒருவரோடொருவர் மேல் கொண்டுள்ள அன்பிற்கு அடையாளமாக பொதுவிருந்து உண்டனர். இதை அவர்கள் **அன்பின் விருந்து** என்று அழைத்தனர். யூதரபிகள் அவர்களது சீடர்களுடனும், இயேசுவும் அவரும் சீஷர்களுடனும் அன்பின் விருந்தை ஆசரித்தார் என்று கூறப்படுகிறது. இந்த அன்பின் விருந்து கர்த்தருடைய இராப்போஜன பந்தியுடன் முடிவுபெற்றது என்றும் கருதப்படுகிறது. இந்த அன்பின் விருந்து குறித்து நாம் யூதா:12, 2பேது 2:13ல் வாசிக்கிறோம்.

15. இதை ஒரு மாதிரியாகக் கொண்டு ஆரவார சத்தமாகிய இக்காலத்துக்குரிய செய்தியை கேட்டு, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறவர்கள்: தேவனுடைய வார்த்தையில், அப்போஸ்தல உபதேசங்களில், இக்காலத்துக்குரிய செய்தியில் உறுதியாய் தரித்திருந்து; ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும், ஏக யோசனையுமுள்ளவர்களாய் சீர்பொருந்தி; ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையுள்ளவர்களாக எண்ணி, தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்படிந்து; அந்நியோநிய ஐக்கியத்திற்கு அடையாளமாக ஒருவருக்கொருவர் வலதுகைக் கொடுத்து, தங்களுக்குள் உள்ள சகோதர சிநேகத்தைப் பலப்படுத்தி, சந்தோஷப்படுகிறவர்களுடனே

சந்தோஷப்படவும், அழுகிறவர்களுடனே அழவும், பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவவும், ஜெபத்தில் உறுதியாய் தரித்திருக்கவும், தாங்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள அன்புக்கு அடையாளமாக அன்பின் விருந்தில் பங்குகொள்ள வாருங்கள் என கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

16. **அன்பின் விருந்து:**
இங்கு நாம் ஒருவருடைய பிரசங்கத்தைக் கேட்ட கூடவில்லை. மாறாக:

1) நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் குற்றமற்றதாயிருக்கும்படி நம்மைக் காத்துக்கொள்வதற்கேதுவான பக்திவிருத்திக்கடுத்தக் காரியங்களை தியானிக்கவும்.
2) நாம் நம்மில் காணப்படும் தவறுகளை, குறைகளை, குற்றங்களை உணர்ந்து, நாம் ஆவிக்குரியவர்களாதலால் நமக்குள் பிரிவினைகள் இல்லாமல் ஒரே காரியத்தை பேசவும், ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவராய் நற்சீர் பொருந்தவும்.
3) தேவனுடைய வார்த்தை, இக்காலத்துக்குரிய செய்தி சீர்திருத்தலுக்கு பிரயோசனமாயிருப்பதால் நம்முடைய தவறுகளை, குற்றங்களை, குறைகளை அடையாளம் கண்டு சீர்கேடுகளைச் சீர்படுத்தி நம்மை சத்தியத்திற்குள் பலப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, நிலைநிறுத்தவும்.
4) கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்கான வழிவகைகள் குறித்து ஆலோசித்து அவைகளை செயல்படுத்தவும்.
5) சபையில் காணப்படும் மாறுபாடான உபதேசங்களை கண்டறிந்து அவைகளில் இருந்து நம்மை விலக்கிக் காத்துக்கொள்ளவும். மாறுபாடான உபதேசங்களைக் குறித்து நாம் அசதியாயிராமல் மிக மிக ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஏனென்றால் அவைகள் நம்மை தேவனுடைய வார்த்தையின் மேலுள்ள விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடும்.
6) சபையில் காணப்படும் மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்களை, கள்ள கபடமுள்ள வேலையாட்களை அடையாளம் கண்டு, அவர்களை விட்டு விலக மந்தையை எச்சரிக்கவும்.
7) இதோ, மணவாளன் வருகிறார் என்ற ஆரவார செய்தியைக் கேட்டு புத்தியுள்ள, புத்தியில்லாத கன்னிகைகள் அவருக்கு எதிர்கொண்டு போக தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கும் இந்த வேளையில் நாம் புத்தியுள்ள கனிகளாக நம் தீவட்டிகளில் எண்ணெ உடையவர்களாய், எடுத்துக்கொள்ளப்படுதலுக்குரிய விசுவாசத்தை உடையவர்களாய் காணப்பட.
8) நாம் பூரணராவதற்கு கடந்து செல்வதற்கான காரியங்களை நாடி, தேடி, அவைகளை கண்டறிந்து நம்மை சீர்தூக்கிக் கொள்ளவும் பிரயோஜனமாயிருக்குமென கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். தேவனுக்குச் சித்தமானால் அது அப்படியே ஆகும்.

17. கர்த்தருக்குச் சித்தமானால் 2003, நவம்பர் மாதம் முதல் கர்த்தருடைய ஆதீனத்தில் இதற்கென்று நியமிக்கப்பட்ட காலம் வரை பிரதி மாதம் 3ம் ஞாயிறு மாலை சரியாக 4.00 மணிக்கு நாம் அன்பின் விருந்தை ஆரம்பித்து இரவு 8.00 மணிக்குள் முடித்துவிட வழிநடத்தப்படுகிறேன். இந்த அன்பின் விருந்தின் முதல் கூட்டம் முதல் பக்கம், இடது புறம் மேற்பகுதியில் உள்ள எனது இல்ல விலாசத்தில் 2003, நவம்பர் மாதம், 16ம் தேதி மாலை 4.00 மணிக்கு கர்த்தருடைய சித்தத்தின்படியும், ஆவியின் வழிநடத்துதலின்படியும் நடைபெறும் என்பதை அறிவித்துக்கொள்ளுகிறேன். இதில் பாஸ்டர்கள், விசுவாசிகள் என்ற பாகுபாடு எதுவுமின்றி; அழைக்கப்பட்டவர்கள் சகோதரிகளாகிய தங்கள் மனைவிகளுடன் வந்து கலந்துகொள்ளும்படி அழைக்கிறேன். ஏனென்றால் மனைவிகள் புருஷர்களுடனே கூட நித்தியஜீவனாகிய கிருபையை சுதந்தரித்துக்கொள்கிறவர்களாய் இருப்பதினால் அவர்களை தடைபண்ணுகிறது தேவசித்தமாயிருக்காது என எண்ணுகிறேன். நான் மேற்கூறிய வண்ணமாக இங்கு நாம் ஒருவருடைய செய்தியைக் கேட்க அல்ல, மாறாக ஒருவர் கருத்துக்களை ஒருவர், ஒருவர் ஆலோசனைகளை ஒருவர், தேவனுடைய வார்த்தையின்படி, இக்காலத்துக்குரிய செய்தியின்படி பரிமாறி பகிர்ந்துகொண்டு நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் பக்திவிருத்தக்கான ஆவிக்குரிய காரியங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டு அதன்மீது உரையாடி, தேவனோடு உரையாட கூடுகிறோம். அழைக்கப்பட்டவர்கள் தயவுசெய்து தங்கள் வருகைக் குறித்து எனக்கு முன் அறிவிப்புக் கொடுத்தால் அது எனது இதர நடவடிக்கைகளுக்கு மிக்க பிரயோஜனமாயிருக்கும்.

18. இந்த அன்பின் விருந்துக்கு சத்தியத்தின் மேல் பசித்தாகம் உள்ளவர்கள் என்று நான் நினைத்த ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் மட்டுமே அழைக்கப்பட்டுள்ளனர். செய்தியிலிருக்கிறோம், ஊழியம் செய்கிறோம் என்று கூறும் அனைத்து ஊழியர்களும், விசுவாசிகளும் அழைக்கப்படவில்லை. அழைக்கப்பட்டவர்களை இப்படிப்பட்ட அன்பின் விருந்துக்கு செல்லக்கூடாது, கர்த்தருடைய இராப்போஜன பந்தியில் பங்குகொள்ளக்கூடாது என அவர்கள் சார்ந்திருக்கும் சபைகளில் அறிக்கை வெளியிடலாம். அந்நிலையில் அழைக்கப்பட்டவர்கள் அவர்களிடம் அவர்களது அறிக்கைக்கு தகுந்த காரணத்தை தேவனுடைய வார்த்தையிலிருந்தும், இக்காலத்துக்குரிய செய்தியிலிருந்தும் கேளுங்கள். நிச்சயமாக அவர்கள் கொடுக்க முடியாது. மாறாக அவர்கள் தங்கள் சொந்த கருத்துக்களை உங்கள் மீது திணிக்க முயற்சிப்பார்கள். அப்படிப்பட்ட ஒரு மனிதனுடைய சொந்த கருத்துக்களுக்கு நீங்கள் செவிக் கொடுக்க தேவையில்லை.

19. 1909ம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டு, பின் 1954ல் 13வது முறையாக மறுபதிப்பு செய்யப்பட்ட வேத அகராதி ஒன்றை இந்நாட்களில் நான் வாசிக்க தேவ சமயம் வாய்த்தது. அதில் இப்படிப்பட்டதான அன்பின் விருந்து ஜெபத்துடன் ஆரம்பமானது என்றும், சில பாடல்களை அனைவரும் எழுந்துநிற்க பாடினார்கள் என்றும், விருந்து பரிமாறப்பட்டது என்றும், அது ரொட்டி, மீன், காய்கறிகளைக் கொண்டதாக இருந்தது எனவும், மீனுக்கு மிக மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது எனவும், பின் கர்த்தருடைய பந்தி ஆரம்பிக்கப்பட்டது எனவும் முடிவாக ஜெபத்துடன் முடிவடைந்தது என்றும் கண்டேன். கர்த்தருக்கு சித்தமானால் நாமும் அவ்வண்ணமாகவே ஆசரிக்க, அது கர்த்தர் கொடுத்த ஆலொசனை என ஆவியினால் வழிநடத்தப்படுகிறேன்.

20. நாம் விருந்துக்கு முன் மேலே தியானித்த வண்ணமாக ஆவிக்குரிய, பக்திவிருத்திக்கான காரியங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டு, தேவனோடு உறவாடி அதன்பின் அன்பின் விருந்தை புசித்து, கர்த்தருடைய பந்தியையும், கால்களைக் கழுவும் சடங்கையும் ஆசரித்து, முடிவாக ஜெபத்துடன் அன்பின் விருந்தை முடிக்கலாம் எனவும் சத்திய ஆவியினால் சத்தியத்திற்குள் வழிநடத்தப்படுகிறேன்.

21. இந்த அன்பின் விருந்தில் வாக்குவாதங்களுக்கும் தர்க்கங்களுக்கும் இடமேயில்லை. இது முற்றிலுமாக ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப்பட்ட; கிறிஸ்துவின் சரீரமாயும், அவையவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தனித்தனியே அவையவங்களாயிருக்கிறவர்களின் ஐக்கியம் ஆகும். இதில் பங்கு கொள்ள வரும் சகோதரர்கள், சகோதரிகள் தங்கள் ஆவி ஆத்துமா சரீரம் தேவனுடைய பார்வையில் பரிபூரணமாகயிருக்கும்படி கடந்து வருவார்களானால் இந்த ஐக்கியம் ஒரு வல்லமையுள்ளதாகயிருக்கும். இதில் நான் ஐயத்துக்கிடமில்லாத நிச்சயத்தையுடையவனாயிருக்கிறேன்.

22. நீங்கள் எனது இல்லத்திற்கு எந்தவிதமான சிரமமின்றி வருவதற்காக, பூவிருந்தவல்லி (இதற்கு பூந்தமல்லி, பூவை போன்ற பெயர்கள் உண்டு) பஸ் நிலையத்திலிருந்து எனது இல்லத்துக்கான வழி வரைபடம் கொடுத்துள்ளேன்.




1. டிரங் ரோடு (Trank Road)
2. பூவை பஸ்நிலையம்
3. பூவை பஸ் நிலையத்திலிருந்து நம்பித் தெருவிற்கு (5) வரும் குப்பைகளினால் நிறைந்த குறுக்குப் பாதை
4. தேரடித் தெரு
5. நம்பித் தெரு
6. குளக்கரைத் தெரு
7. குளக்கரைத் தெரு தொடர்
8. தனலெட்சுமி ஹவுஸ், 2வது மாடி, 2வது குறுக்குத் தெரு, 11-திருமால் நகர்.

வீட்டு முகப்பில் Image Aqua Farms என்ற போர்டு இருக்கும். ஒரு தெருவிலிருந்து அடுத்த தெருவிற்கிடையேயுள்ள தூரம் அதிகபட்சமாக ஒரு நமிட நடைப்பயணமே. பூவை பஸ் நிலையத்திலிருந்து எனது வீடு சுமார் 5–7 நிமிட நடைப் பயணத்தில் உள்ளது.

23. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனே கூட இருப்பதாக. ஆமென்.

*அக்டோபர், 2003.*

*கிறிஸ்துவின் அன்பில்,*
*சகோ.காலேப் யோசுவா.*